# காரமடை திருத்தலத்தின் பெயர்க்காரணம்

கோவை மாவட்டம், காரமடையில் உள்ள வைணவத்தலமான, அரங்கநாத பெருமாள் கோவில் மகா கும்பாபிஷேகம், ராஜ கோபுர கும்பாபிஷேகம் ஜூன் 7ல் நடைபெற உள்ளது. அதையொட்டிய தொடர் கட்டுரையின் முதல் பகுதி இங்கே...



கொங்கு நாட்டின், 24 நாடுகளுள் ஒன்றான ஆறை நாட்டின் அதிசயமான காரை வனம், வடக்கில் நீலகிரி மலையையும், கிழக்கில் வேதகிரி மலையையும், மேற்கில் வெள்ளியங்கிரி மலையையும், வடகிழக்கில் சித்தர்கள் போற்றும் ஓதி மலையையும், தெற்கில் மேகங்கள் தொட்டுச் செல்லும்படியாக பல சிகரங்களை கொண்ட மேல்முடி, பாலமலை, தண்டிகை மலை, பிரகஸ்பதி மலைகளையும் அரணாக கொண்டது.

வற்றாத ஜீவநதியாம், பவானி ஆற்றின் கரையில் பரந்து விரிந்த வனப்பகுதியே காரைவனம். அடர்ந்த காரை மரப் புதர்கள் இருந்ததாலும், பல நீர்மடைகள் சூழ்ந்து இருந்ததாலும், இப்பகுதிக்கு, 'காரைமடை' என்னும் பெயர் விளங்கியது.

காவிரி, கொள்ளிடம் என இருபுறமும் நீரால் சூழப்பட்டுள்ள திருவரங்கத்தை போலவே, காரைமடையும் ஒரு புறம் பவானி நதியாலும், மற்றொரு புறம் கவுசிக நதியாலும் சூழப்பட்டு, பெரும் வளத்துடன் விளங்கியது. கால மாற்றங்களால், கவுசிக நதி, பல சிற்றோடைகளாகவும், நீர்மடைகளாகவும் மாற்றம் கொண்டு விட்டது.




அவ்வாறாக புகழ்பெற்ற காரைவனம் என்னும் காரைமடை தல புராணம் பற்றியும், அங்கு எழுந்தருளியுள்ள அரங்கநாதப் பெருமானின் பெருமை, தீர்த்தங்களின் மகிமை பற்றியும் அறிந்து கொள்வோம்.

கிருத யுகத்தில் பிரம்மனுக்கும், திரேதா யுகத்தில் இந்திரனுக்கும், துவாபர யுகத்தில் குபேரனுக்கும், கலியுகத்தில் கருடனுக்கும் காட்சி தந்து சதுர்யுகம் கண்ட பரம்பொருளாய் விளங்குகிறார் அரங்கநாதப் பெருமாள்.

முன்னொரு சமயம், தவயோக மகரிஷிகள், தங்கள் ஞானசக்தியால், 'கலியுகத்தில் மக்களெல்லாம் தங்கள் தன்மை இழந்து, மதிகெட்டு, நற்கதி கிடைக்காமல் அல்லல்படுவர்' என்பதை உணர்ந்து கொண்டனர்; சூத முனிவர் மூலம் சனகாதி முனிவர்கள் உள்ளிட்ட சகல முனிவர்களுக்கும் பக்தி மார்க்கம் ததும்பிய புராண இதிகாசங்களை கடைபிடித்து, உய்யும் பொருட்டு, அவர்களும், அவர்கள் மூலமாக உலக மக்களும், அறிந்து நற்கதி அடைய வேண்டி உபதேசிக்கச் செய்தனர்.

சூத முனிவரும், அவ்விதமாக புராண இதிகாசங்களை உபதேசிக்க செய்தார். அச்சமயம், 'தலம், மூர்த்தி, தீர்த்தம் இவற்றின் சிறப்புகள் பற்றி சொல்ல வேண்டும்' என முனிவர்கள் கேட்க, இமாலய பர்வதத்தின் தென்பாதியிலும், தட்சண சமுத்திரத்தின் வடபாகத்திலும் புண்ணிய பூமியாய் விளங்கும் காரை வனத்தின் பெருமையையும், மகிமையையும் கூற ஆரம்பித்தார்.

# அரங்கநாதரை வெட்டிய தொட்டியன்

கோவை மாவட்டம், காரமடையில் உள்ள வைணவத்தலமான, அரங்கநாத பெருமாள் கோவில் மகா கும்பாபிஷேகம், ஜூன் 7ல் நடைபெற உள்ளது. அதையொட்டிய தொடர் கட்டுரையின் இரண்டாம் பகுதி இங்கே...

திரேதா யுகத்தில் ஒருநாள், சனகாதி முனிவர்கள், இந்திரனை காண வந்தனர். அவர்கள் வந்ததை கவனிக்கத் தவறிய இந்திரன், தேவலோக மங்கைகளோடு நடனத்தில் ஈடுபட்டுக் களித்திருந்தான். கோப முற்ற முனிவர்கள், பூலோகத்தில் மனிதப்பிறவி எடுக்கும்படி இந்திரனுக்கு சாபமிட்டனர்.

அதுபோல, பூலோகத்தில் பெள்ளாதி (கோவை மாவட்டம் காரமடை அருகே தற்போது பெள்ளாதி கிராமம் உள்ளது) நகரவாசியான தொட்டியனாக பிறந்து வளர்ந்து, ஆடு, மாடுகளை மேய்த்து காலத்தை கழித்து வந்தான்.



அவனது ஒரு காராம்பசு தினமும் வற்றிய மடியுடன் வருவதை கண்டு, காரணம் அறிய விரும்பினான்; மறுநாள், குறிப்பிட்ட அந்த காராம்பசுவை தொடர்ந்து சென்றான். காரைவனத்திற்கு சென்ற காராம்பசு, ஒரு காரை புதரின் மீது தானாக பால் சொரிய ஆரம்பித்தது.




கோபமுற்ற தொட்டியன், தன் கையிலிருந்த கொடுவாளால் புதரை வெட்டியபோது, புதரில் இருந்த பகவானின் நெற்றியில் வெட்டுப்பட்டு, ரத்தம் பீறிட்டு வர ஆரம்பித்தது. அதைக்கண்ட தொட்டியன் பயந்து மூர்ச்சையாகி விழுந்தான்.

இரவு வெகுநேரமாகியும் தொட்டியன் திரும்பாத காரணத்தால், ஊர்மக்கள் தீப்பந்தங்களுடன் காரை வனத்தில் தேடினர். புதர் அருகே தொட்டியன் மயக்கமுற்று விழுந்து கிடந்ததையும், சுற்றிலும் ரத்தம் மடைபோல் தேங்கி கிடந்ததையும் கண்ட மக்கள், பதைபதைத்தனர். குரு பட்டரை அழைத்து வந்து காட்டியபோது, தோன்றியிருப்பது பகவான் என்று உணர்ந்த பட்டர், அதுபற்றி தெரிவித்தார்.

அப்போது அசரீரி வாக்கு, "எனக்கு சந்தன காப்பு செய்து பாருங்கள், உங்கள் சந்தேகம் தீரும்' என்று உரைத்தது. மக்கள் சந்தனக்காப்பு செய்து பார்த்தபோது, பகவான் சாரங்கபாணியாக காட்சி தந்தார்.

தொட்டியனுக்கு பூர்வ ஞாபகத்தை ஏற்படுத்தி, 'உனக்கு சாப விமோசனம் கிடைத்து விட்டது. சில காலம் இங்கிருந்து கோவிலமைத்து, வழிபட்டு, பின் இந்திரபதவியை அடைவாயாக' என்று அருளினார்.

அவ்விதமே செய்து, பின் இந்திரலோகம் சென்று, மீண்டும் இந்திர பதவியை அடைந்தான். சாரங்கபாணியாக காட்சி தந்த காரணத்தால், இன்றும் வில்லுடன் சாரங்கபாணியாக, ஸ்ரீ ராம விக்ரஹம், கர்ப்பகிரஹ பிரகாரத்தில் அமைந்துள்ளது.

நாளை... பெருமாளை தூக்கி வீசியது கருடன்!

தினமலர்
கோயம்புத்தூர் | புதன் | 27.5.2015

# பெருமாளை தூக்கி வீசியது கருடன்!

கோவை மாவட்டம், காரமடையில் உள்ள வைணவத்தலமான, அரங்கநாத பெருமாள் கோவில் மகா கும்பாபிஷேகம், ஜூன் 7ல் நடைபெற உள்ளது. அதையொட்டிய தொடர் கட்டுரையின் மூன்றாம் பகுதி இங்கே.....

பகவான் கிருஷ்ணாவதாரம் எடுத்து, பல லீலைகள் நிகழ்த்தி வரும் வேளையில், வைகுந்தத்தில் கருடன் எங்கும் செல்லாமையினால், மமதை ஏற்பட்டு, அக்ஞானம் மேலிட்டு யுத்தம் செய்ய ஆவல் கொண்டார்.

பிரம்மாதி தேவர்களிடம் சென்று, அங்கு தம் காரியம் கை கூடாதமையால், அஷ்ட திக் பாலகர்களையும், அஷ்ட வசுக்களையும் தம் புஜ பல பராக்கிரமத்தால் வென்றும், தோள் தினவு அடங்காமையால், பூலோகம் வந்து ஸ்ரீகிருஷ்ணனிடம் யுத்தம் செய்ய ஆரம்பித்தார்.



சிறப்பு அலங்காரத்தில், காரமடை அரங்கநாதர்.

துவாபர யுகம் முடிந்து கலியுகம் தொடங்கியும் யுத்தம் முடிவடையா நிலையில், லோக காரண காரியம் வேண்டி, ஸ்ரீகிருஷ்ணன் தான் தோல்வியுறும் நிலையில், இருப்பதை போல் பாசாங்கு செய்ய ஆரம்பித்தார். அப்போது கருடன், தம் முழு பலத்தையும் திரட்டி பகவானை ஆகாயத்தில் தூக்கியெறிய, காரைவனத்தினுள்ளே பிரம்ம தீர்த்தத்தின் அருகே விழுந்தார்.

இதை பார்த்துக்கொண்டிருந்த பிரம்ம ருத்ராதிகளும், முப்பத்து முக்கோடி தேவர்களும், திக் பாலகர்களும், பகவான் விழுந்த காரைவனத்தில் [illegible]




அப்போது, பூமியில் தலை வரை புதையுண்ட நிலையில் பகவானை கண்ட பிரம்மாதி தேவர்களும், அஷ்டதிக் பாலகர்களும் பதைபதைத்தனர்.

தீர்த்தங்களால் அபிஷேகம் செய்து உபசரித்தனர். அக்ஞானம் நீங்கிய கருடன், தம்மை மன்னித்தருளும்படி பிரார்த்திக்க, பகவான் அரங்கநாதனாக அனைவருக்கும் காட்சியளித்தார்.

'இத்தலத்தில் கோவில் கொள்ளவே, கருடனுக்கு இவ்விதமாக செய்யும்படி சங்கல்பித்தோம். இனி, நாம் இத்தலத்தில் வீற்றிருந்து வரும் அடியார் துயர்தீர அருள்புரிவோம். வருடந்தோறும் இந்நாளை விழாவாக கொண்டாடக் கடவீர்' என்று, பகவான் அருளினார்.

அன்றுமுதல் சகல லோக நாயகனாக ஸ்ரீமந் நாராயணன், 'அரங்கநாதன்' என்னும் நாமத்தோடாக நித்யவாசம் புரிந்து வருகிறார். இத்தலத்தில் தேவர்கள் பந்தம் கொண்டு வந்து பகவானை தேடியதால், அதை பந்தசேவை எனவும், பகவானின் உபசாரத்துக்காக செய்த சேவைகளை, தண்ணீர் சேவை, கவாள சேவை எனவும், இன்றளவும் பிரார்த்தனை காரியங்களாக பக்தர்கள் செய்து வருகின்றனர்.

பகவான் தோன்றிய நாள், பிரம்மோத்சவ திருவிழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. தேர்த்திருவிழா முடிந்ததும், ஆயிரக்கணக்கான பக்தர்கள், கையில் தீப்பந்தங்களை ஏந்தி, நேர்த்திக்கடன் செலுத்தி வருகின்றனர். பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் தெப்பக்குளத்தில் இருந்து தோல் பையில் தீர்த்தத்தை

# வேறெந்த கோவிலிலும் இல்லாத ராம பாணம்!



■ காரமடை அரங்கநாதர்.

கோவை மாவட்டம், காரமடையில் உள்ள வைணவத்தலமான, அரங்கநாத பெருமாள் கோவில் மகா கும்பாபிஷேகம், ஜூன் 7ல் நடைபெற உள்ளது. அதையொட்டிய தொடர் கட்டுரையின் நான்காம் பகுதி இங்கே...

கொங்கு திருநாட்டின் ஒரு பகுதியான காரைமடையினில், கலியுக தெய்வமாய் அருள்பாலிக்கும் அரங்கன் கோவிலில், அருவினையையும், உடல் அல்லலையும் தீர்க்கும் அற்புத ஆயுதமாய் ராமபாணம் இருக்கிறது.

'பிரகாரம் சாரங்கம்' என்ற வில்லை, ஆயுதமாகக் கொண்ட ஸ்ரீராமபிரானே சாரங்கபாணியாக இந்திரனுக்கு இத்தலத்தில் அருளியதால், இங்கு ராம பாணம் எனும் ஆயுதம் இருப்பது எங்கும் இல்லா சிறப்பாகும்.




தாமிர பட்டையான தகட்டில், ஒருபுறம் சயனத் திருக்கோலத்தில், அரங்கப் பெருமானின் திருவுரு வமும், மற்றொரு புறம் மகா சுதர்சன யந்திரத்தின் பீஜாட்சரங்களும் பொறிக்கப்பட்டு, இருபுறமும் வெள்ளித்தகடு களால் போர்த்தப்பட்ட ராமபாணம் கருவறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த ராமபாணத்தை, கோவிலுக்கு வரும் பக்தர்களின் தலையில் வைத்து ஆசீர்வதிக்கின்றனர். அவ்வாறாக ஆசி பெறும் பக்தர்களின், தீரா நோய்களும் தீர்ந்து குணமடைவது இத்தலத்தின் மகத்துவமாகும்.

ராமபிரானின் ராமபாணம், எதிர்வரும் எந்த தீயசக்திகளையும், அழிக்கவல்லது. இந்த ராமபாணமானது ஏவல், பில்லி, சூன்யம் போன்ற தீய சக்திகளால் பாதிக்கப்பட்டவர்களின் வினைகளையும், சித்த பிரமை, மனநலம் குன்றியவர்களின் தீரா நோய்களை தீர்க்க வல்லதாக உள்ளது.

**ராமபாணத்தின் சிறப்பு:**

அரங்கனின் திருவிளையாடல் காரணமாக, பெருமானுடன் ஊடல் கொண்டு அரங்கநாயகி தாயார், கோபித்துக் கொண்டு பிரகஸ்பதி மலை என்றழைக்கப்பட்ட பெட்டத்தம்மன் மலைக்கு சென்று, வாசம் புரிந்தார்.

அவரை சமாதானப்படுத்தி அழைத்து வரும்விதமாக, பிரம்மோற்சவ விழாவில் ஐந்தாம் நாளன்று, 'அம்மன் அழைப்பு' என்ற வைபவம் நடத்தப்படுகிறது. இது, வேறு எங்கும் நிகழாத நிகழ்ச்சியாகும். அர்ச்சகர் ஒருவர், அரங்கன் அருளுடன் மலைக்கு சென்று, அம்மனை வரவேற்று எதிர்கொண்டு அழைக்கும் முகமாக, ராம பாணத்தை கையில் கொடுப்பார். அவரும், அதை தேர் செல்லும், நான்கு திருவீதிகளிலும் கைகளில் சுழற்றிக் கொண்டு செல்வார்; மேளதாளம், தாரை, தப்பட்டை வாத்தியங்களுடன், வாணவேடிக்கை முழங்க ஆரவாரத்துடன் கோவிலுக்கு அம்மனை அழைத்து வரும் காட்சியை காண, கண்கள் கோடி வேண்டும். இந்நிகழ்ச்சி, வேறெங்கும் இல்லாத சிறப்பு அம்சமாகும்.

நாளை... பெரும்புகழ் பெற்ற தல விருட்சம்

தினமலர்
கோயம்புத்தூர் | வெள்ளி | 29.5.2015

5

## தல விருட்சம்

# காரை மரம்



காரமடை அரங்கநாதர் கோவில் தல விருட்சமான, அரும் புகழ் வாய்ந்த காரை மரம்.

கோவை மாவட்டம், காரமடையில் உள்ள வைணவத்தலமான, அரங்கநாத பெருமான் கோவில் மகா கும்பாபிஷேகம், ஜூன் 7ல் நடைபெற உள்ளது. அதையொட்டிய தொடர் கட்டுரையின் ஐந்தாம் பகுதி இங்கே...

அரும்பெரும் மருந்தாய் விளங்கும் காரை மரம், தானாக தோன்றி சுயம்பு மூர்த்தியாக அரங்கன் வீற்றிருக்கும் காரமடை திருத்தலத்தில், அரியதோர் தல விருட்சமாக, அமைந்தது அற்புதமாகும்.

கி.பி., 16ம் நூற்றாண்டில், விஜயநகரப் பேரரசின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட, நாயக்க அரசர்கள் இப்பகுதியை ஆட்சி புரிந்து வந்தனர். அவர்கள் வழிவந்த மதுரை திருமலை நாயக்கர் இப்பகுதியில் முகாமிட்டு இருந்த சமயம், அவரது முதுகில் ராஜபிளவை என்னும் நோய் தாக்கி அவதியுற்றிருந்தார்.

இறைவனை வேண்டியபோது, அரங்கன் அவரது கனவில் தோன்றி, 'காரைமடை திருத்தலம் சென்று தல விருட்சமாகிய காரை மரத்தின் இலையை பறித்து மருந்தாக உட்கொண்டால், நோய் குணமாகும்' என அருளினார். அவ்வாறே, தன் படை பரிவாரங்களுடன் வந்து தன் வைத்தியர்களை கொண்டு, காரை இலையை மருந்தாக்கி சாப்பிடவே, நோய் நீங்கி குணம் ஏற்பட்டது, வரலாறு.




நோயை தீர்த்த திருமாலரங்கனை வணங்கி, மிக அற்புதமான கோவிலையும், திருக்கல்யாண மண்டபம், திரு மதில்கள், தெப்பக்குளம், பரிவேட்டை மண்டபம், நந்தவனம் மற்றும் நான்கு மாட வீதிகளையும் அமைத்து, அழகுமிகு திருத்தேர் அமைத்து, திருவிழாக் கொண்டாடினார் திருமலை நாயக்கர் என்பதும் வரலாறு.

நோய் தீர்ப்பது மட்டுமின்றி குழந்தை பேறு இல்லாதவர்கள், இம்மரத்தில் தொட்டில் கட்டி மரத்தைச் சுற்றி வலம் வந்தால், புத்திர பாக்கியம் கிடைக்கும் என்பது ஐதீகம். நீரூற்றி மரம் வளர்ப்பது இயல்பு. இப்பகுதி பக்தர்கள் கொண்டு வந்து ஊற்றும் பசும்பாலால் இம்மரம் வளர்ந்து, கல்மரம் போல் காட்சியளிப்பது பலருக்கும் வியப்பளிக்கும் விஷயமே.

நாளை... காரமடை தாசர்கள்

தினமலர்
கோயம்புத்தூர் | சனி | 30.5.2015

# அரங்கதாசர்களின் சிறப்பு!

கோவை மாவட்டம், காரமடையில் உள்ள வைணவத்தலமான, அரங்கநாத பெருமாள் கோவில் மகா கும்பாபிஷேகம், ஜூன் 7ல் நடைபெற உள்ளது. அதையொட்டிய தொடர் கட்டுரையின் ஆறாம் பகுதி இங்கே...

காரமடை அரங்கனின் பக்தர்கள், தங்களை, 'தாசர்' என அழைத்துக் கொள்கின்றனர். இவர்கள், அரங்கனுக்கு வழி வழியாக, அடிமைகளாக இருப்பவர்கள். உயர்வு தாழ்வு இன்றி, சாதி பேதமின்றி, அரங்கனுக்கு சேவை புரிகின்றனர். பரம்பரை பரம்பரையாக தங்களுக்கென, ஒரு சேவையை செய்து வருகின்றனர்.


பக்தி பரவசத்துடன் பந்த சேவையில் ஈடுபட்ட பக்தர்கள் (பழைய படம்)

ஆதியில் அரங்கன் இருந்த புற்றைத் தேடி, கையில் தீப்பந்தங்களுடன் காட்டில் அலைந்து திரிந்த கிராமத்தினர், ஓரிடத்தில் கண்டுபிடித்தனர். அப்போது, அசரீரி தோன்றி, 'சந்தன காப்பிட்டு பார்த்தால், சந்தேகம் தீரும்' என்று கூறியது.

கூடியிருந்தோர் தங்கள் கைகளில் வைத்திருந்த தோல் பையில் நீரை கொணர்ந்து சுத்தப்படுத்தி, சந்தனக்காப்பிட்டு பார்க்கும்பொழுது, அரங்கன், சங்கு சக்கரத்துடன் அனைவருக்கும் அருள்பாலித்தார் என்கிறது, தல புராணம்.

அரங்கனை கண்ட அடியார்கள் (தாசர்கள்) ஆடிப்பாடி மகிழ்ந்து, தங்கள் வசமிருந்த கனிகளையும், சர்க்கரையையும், கலந்து கவளம் கவளமாக படைத்தனர். அதையே தாங்களும் உட்கொண்டு பேருவகை கொண்டனர். இவ்வாறான நிகழ்ச்சியே, நாளடைவில் அரங்கனுக்கு உகந்த பந்தசேவை, தண்ணீர் சேவை, கவாள சேவை என பிரார்த்தனை காரியங்களாகி விட்டது.

எம்பெருமானுக்கு ஐந்து ஆயுதங்கள் அணிகளாக விளங்குவதை போல், அரங்கன் அடியார்களான தாசர்களும், ஐந்து அம்சங்களை கொண்டிருக்கின்றனர்.

தாபம் எனப்படும் முத்திரை தரித்தல், திருமண்காப்பு தரித்தல், அடிமை திருநாமம், மந்திரம், திருஆராதனம் என ஐந்து அம்சங்களையும், திருவிலச்சினை தரித்தல் எனக் கொண்டு தன் உள்ளத்தாலும், உடம்பாலும் ஏற்றுக் கொண்டு, தன் வாழ்க்கையிலும் நல்ல உயர்வினைக் கண்டு தன் சந்ததிகளை அரங்கனின் சேவைக்கு ஆட்படுத்துவதே அரங்கதாசன் என பெருமிதம் கொள்ளக் கூடியதாகும்.




குருவிடம் நல்வழி அறிந்து, தன் உடலில் பன்னிரண்டு இடங்களில் திருமண் காப்பு தரித்து, துளசி மணி மாலை அணிந்து, கால், இடுப்பில் சதங்கைகளை கட்டிக்கொண்டு, கையில் சங்கு, சேகண்டி, பிரம்பு, கத்தி, தோல்பை, காதணிகலன், மஞ்சளாடை போன்ற பதினெட்டு வகை சின்னங்களை தரித்து, அருளுடனும் ஆவேசத்துடனும் ஆலயம் சென்று அரங்கனை கண்டு அகமலர்ந்து, தன்னை உணர்ந்து பிறர்க்கும் உணர்த்துவதே, அரங்கதாசனின் சிறப்பாகும்.

நாளை... அரங்கன் அருளும், கவாள சேவையும்

# அரங்கன் அருளும்; கவாள சேவையும்!

கோவை மாவட்டம், காரமடையில் உள்ள வைணவத்தலமான, அரங்கநாத பெருமாள் கோவில் மகா கும்பாபிஷேகம், ஜூன் 7ல் நடைபெற உள்ளது. அதையொட்டிய தொடர் கட்டுரையின் ஏழாம் பகுதி இங்கே...



■ பந்த சேவையுடன் அரங்க தாசர்கள்.

காரமடை அரங்கநாதர் கோவிலில், தண்ணீர் சேவை, பந்த சேவை, கவாள சேவை என, மூன்று வகை சேவைகளை தாசர்கள், பகவானுக்கு நேர்த்திக்கடனாக செலுத்தி வருகின்றனர்.

**தண்ணீர் சேவை:** தேர்த்திருவிழாவின் போது, தேர் நிலை வந்து நின்றவுடன் தாசர்களின் சதங்கை ஒலி காரை நகர் முழுவதும் ஒலிக்க துவங்கிவிடும். மஞ்சளாடை அணிந்து காம்வெண்டயம் ஒலிக்க, கருடதீர்த்த புஷ்கரணியில் இருந்து [தெப்பக்குளம்] தோல்பையில் தீர்த்தத்தை கொணர்ந்து, அரங்கன் திருவடியில் சேர்த்து அரங்கனை குளிர்வித்து, போற்றதலுக்குரிய சிறப்பை செய்கின்றனர்.

**பந்த சேவை:** பெரிய முத்திரை வைத்துள்ள அரங்கதாசர்கள், கடும் விரதத்துடன் தாரை, தப்பட்டை, வண்டை, பம்பை, தவுல் ஒலி எழுப்ப, தீப்பந்தங்களை கையில் எடுத்து கொண்டு, திருவீதி வலம் வந்து அரங்கனை வணங்குவர். பின் குருவிடம் சென்று ஆசி பெற்று, அவர் தரும் தீர்த்தப் பிரசாதங்களை தானும் உண்டு, தன்னுடன் வந்த அனைவருக்கும் வழங்கி விரதத்தை முடித்துக் கொள்வர்.




பரிவேட்டை நாளாகிய அன்று, காணும் இடம் எல்லாம், கூட்டம் கூட்டமாக கைகளில் பந்தங்களை ஏந்திக் கொண்டு, தாசர்கள், 'கோவிந்தா பராக்! ரங்கா பராக்! கோவிந்தா, கோவிந்தா' என கோஷமிட்டு செல்லும் காட்சி பார்ப்போரை பரவசப்படுத்தும்.

**கவாள சேவை:** அரங்கன் இருந்த புதரை வெட்டியவர் பூத சாப நிவர்த்திக்காக, கவாளம் எடுக்கும் வழக்கம் ஏற்பட்டது. கவாளத்தில், பூத கவாளம், நடை கவாளம், மாத்து கவாளம் என மூன்று வகை உண்டு. பூத கவாளம் என்பது பூதத்திற்கு படைப்பது போன்று, மூன்று பனை ஓலை பெட்டிகளில் பழம், சர்க்கரை, பால், தயிர், திராட்சை கலந்து மூன்று, நான்கு தாசர்கள் முன் படைப்பர். தாசர்கள் சில மந்திரங்களை உச்சரித்து தியானம் செய்து பின், தன் நிலைய மிந்து பூதங்கள் போல் வாயைத் திறந்து பெட்டியில் உள்ளதை குடிக்கின்றனர். பூதங்கள் இவர்கள் மீது வந்து அதை ஏற்று கொள்வதாக ஐதீகம்.

மாத்து கவாளம் பழங்களையும், சர்க்கரையையும் சேர்த்து, பிசைந்து வெள்ளை துணி மீது, மூன்று இடங்களில் வைத்திருப்பர். இவற்றை புறங்கை கட்டப்பட்ட தாசன் கருடாழ்வார் போல, கால்களை மடித்து வைத்து குனிந்து எடுக்க வேண்டும்.

வழி நெடுக பிரார்த்தனை செய்து கொண்ட மக்கள், மாத்துகளை விரித்து கவாளம் இட்டு வைப்பர். இந்த கவாளத்தின்போது தாசர்கள் தரும் கவாளத்தை பெற்று பக்தர்கள் உட்கொள்வர். தாசன் நடந்து கொண்டிருக்கும்போது, கொடுக்கப்படும் கவாளத்திற்கு நடைகவாளம் என்று பெயர். இந்த நாட்களில் எத்தனை பழங்களை சாப்பிட்டாலும், எந்த பாதிப்பு ஏற்படாதது அரங்கனின் அற்புதமே.

தினமலர்
கோயம்புத்தூர் | திங்கள் | 1.6.2015

# அரங்கநாதர் திருக்கல்யாண உற்சவம்



■ திருக்கல்யாண உற்சவத்தில் காரமடை அரங்கநாதர்.

கோவை மாவட்டம், காரமடையில் உள்ள வைணவத் தலமான, அரங்கநாத பெருமான் கோவில் மகா கும்பாபிஷேகம், ஜூன் 7ல் நடைபெற உள்ளது. அதையொட்டிய தொடர் கட்டுரையின் எட்டாம் பகுதி இங்கே...

தேவகுரு பிரகஸ்பதியின் மகள் சைலலட்சுமியாக அவதரித்த மகாலட்சுமி, அரங்கனை மணம் புரிந்து அரங்க நாயகி தாயாராக வீற்றிருந்தார். ஆண்டாளை அரங்கன் மணந்து கொண்டதை அறிந்து கோபம் கொண்ட தாயார், பிறந்த வீடான பிரகஸ்பதி மலைக்குச் சென்று, குகையில் தவக்கோலம் மேற்கொண்டார்.

தாயாரை சமாதானப்படுத்தி அழைத்து வர எண்ணிய அரங்கன், வெள்ளைக்குதிரை மீதேறி பிரகஸ்பதி மலைக்கு சென்றார். வழியில் மாடு மேய்த்த தம்பதியை கண்ட அரங்கன், 'மலை மீது யாராவது சென்றார்களா' எனக்கேட்க, இருவரும் பதில் கூறாது நின்றனர்.




'உண்மையை கூறா விட்டால் கல்லாக போவீர்கள்' என அரங்கன் சபித்ததும், பயந்து போன மனைவி, 'ஆம் சுவாமி, மலை மீது தாயார் செல்வதை கண்டோம்' எனக் கூறி விட்டார். அடுத்த கணமே, அவளது தலை வெடித்து சிதறியது. 'தான் மலை மீது செல்வதை யார் வந்து கேட்டாலும், சொல்லக்கூடாது. மீறிச் சொன்னால் தலை வெடிக்கக்கடவது' என தாயார் சபித்திருந்ததே இதற்கு காரணம்.

உண்மையை கூறாது நின்ற அவள் கணவனும் கல்லாகி விட்டான். அவர்களது சிலைகள் தற்போதும் மலைக்கு செல்லும் வழியில் உள்ளன. அதன்பின் மலை மீது ஏறிச்சென்ற குதிரை, ஒரு குகையின் முன், மண்டியிட்டு நகர மறுத்தது. குதிரையின் குறிப்பை உணர்ந்த அரங்கநாதர், தாயார் இருக்கும் குகையினுள் சென்றார்.

அரங்கனின் சமாதானத்தை ஏற்ற தாயார், 'தாங்கள் வற்புறுத்துவதால், மாசிமகத் திருவிழாவின்போது மட்டும், தங்களோடு இருப்பேன். மற்ற நாட்களில் இங்கேயே வாசம் புரிவேன்' என்று கூறி விட்டார்.

'திருவிழா நாட்களிலாவது இருக்க சம்மதித்தாரே' என, மனம் மகிழ்ந்த அரங்கன், திரும்பவும் தன் தலத்துக்கே வந்து சேர்ந்தார். அதன்படி மாசிமகத் விழாவின் ஏழாம்நாள், கோவிலிலிருந்து அர்ச்சகர் ஒருவர் மீது பெருமான் எழுந்தருளி, பெட்டத்தம்மன் மலைக்கு சென்று, தாயாரை அழைத்துக் கொண்டு லட்சுமிநாராயணன் சொரூபமாக வந்து, திருக்கல்யாண உற்சவம் கண்டருள்வதாக புராண வரலாறு கூறுகிறது.

ஆண்டுதோறும், அம்மன் அழைப்பு என்ற பெயரில், வாண வேடிக்கை, தாரை, தப்பட்டை முழங்க நடைபெறும் இந்நிகழ்ச்சி, வேறு எங்குமே காண இயலாத ஒன்றாகும். பிரகஸ்பதிமலை, தற்போது பெட்டத்தம்மன் மலை எனப் பெயர் கொண்டு விளங்கி வருகிறது.

இம்மலை குகையில், தாயார் விக்ர ஹரூபமாக வீற்றிருக்கிறார். தடாகம் அருகில் அனுமான் காவலாக நின்ற நிலையில் உள்ளார். இங்குள்ள தீர்த்தத்தில் குளித்தால், பிணிகள் தீரும் என்பது ஐதீகம்.

நாளை... அழகான அரங்கன் தேர்

தினமலர்
கோயம்புத்தூர் | செவ்வாய் | 2.6.2015

# அரங்கநாதர் திருத்தேரின் சிறப்பு



■ காரமடை அரங்கநாதர் திருத்தேர்.

கோவை மாவட்டம், காரமடையில் உள்ள வைணவத் தலமான, அரங்கநாத பெருமாள் கோவில் மகா கும்பாபிஷேகம், ஜூன் 7ல் நடைபெற உள்ளது. அதை யொட்டிய தொடர் கட்டுரையின் ஒன்பதாம் பகுதி இங்கே...

திருமலை நாயக்கரின் முதுகில் தாக்கிய 'ராஜ பிளவை' நோய், அரங்கநாதர் கோவில் காரை மரத்தின் மகிமையால் நீங்கியது. அகமகிழ்ந்த அவர், திருக்கோவிலில் மதில்கள், கல்யாண மண்டபம், தெப்பக்குளம், பரிவேட்டை மண்டபம், சங்கிலி மண்டபம் கட்டி நேர்த்திக்கடன் நிறைவேற்றினார். திருத்தேர் அமைத்து மாசிமகம், பவுர்ணமி திருநாளில் விழா கொண்டாடினார்.

தேரோட்டம் மற்றும் திருவிழாக்களை தர்மசாஸ்திரப்படி நடத்தி வர வேண்டும் என்று, கொங்கு நாட்டிலுள்ள அனைத்து ஒக்கலிகர், அமல்வாடி ஒலேகார் திம்மண்ணருக்கு, தாமிர தாசன் பட்டயம் மூலம் ஆணையிட்டார்.

**தேரின் தத்துவம்:** மனம் என்னும் கடிவாளத்தால், இந்திரியங்களை கட்டுப்படுத்தி புத்தியை கண்ணடத்தையால் வழிநடத்தினால், சரீரம் எனும் தேரில் வீற்றிருக்கும் இறைவனாகிய ஆத்மாவை உணர்வோம் என்பதே தேரின் கருத்து. அவ்வாறான இந்த ரதத்தில் ராமாயண காண்டங்களாகிய பாலகாண்டம், அயோத்யா காண்டம், ஆரண்யகாண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் என ஆறு காண்டத்து கதையை விளக்கும் பதுமைகள் அமைந்துள்ளன.

நாரதர் வால்மீகிக்கு உபதேசம் செய்வது முதல், அரியணை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்த, வசிஷ்டரே ராமனுக்கு முடி புனையும் பட்டாபிஷேக காட்சிவரை, மரத்தில் சிற்றுளியால் அதி அற்புதமாக செதுக்கி வடித்த சிற்பங்கள் அமைந்துள்ளன.

வால்மீகியும், கம்பனும் காவியத்தில் அமைத்த காட்சிகளாக அமையப்பெற்ற, இப்பதுமைகளை பார்த்து, கவிகளின் பாடல்களை படித்து, பொருள் புரியா பாமரரும் அது கூறும் ராமாவதார கதையை புரிந்து கொள்ள முடியும்.




தமிழகத்தின் மிகப்பெரிய தேர்களுள் ஒன்றான காரமடை தேரின் மீது, வீற்றிருக்கும் அரங்கப்பெருமானை பக்தர்கள் சுற்றி வந்து வணங்கி செல்லும் வகையில் அமைந்துள்ளது ஒரு சிறப்பம்சமாகும். ஊர் கூடி தேர் இழுப்பது என பழமொழிக்கேற்ப, லட்சக்கணக்கான மக்கள் கூடி, நான்குரத வீதிகளிலும், தேரை இழுத்து வரும் பொழுது, ஆடி அசைந்து அழகு மிளிர, அரங்கன் வரும் காட்சி, கண் கொள்ளாக் காட்சியாகும்.

நாளை... ஆங்கிலேய இன்ஜினியருக்கு சாட்டையடி

# ஆங்கிலேய இன்ஜினியருக்கு சாட்டை அடி



கோவை மாவட்டம், காரமடையில் உள்ள வைணவத் தலமான, அரங்கநாத பெருமாள் கோவில் மகா கும்பாபிஷேகம், ஜூன் 7ல் நடைபெற உள்ளது. அதையொட்டிய தொடர் கட்டுரையின் பத்தாம் பகுதி இங்கே.

காரமடை அரங்கநாதரின் சக்தியை புலப்படுத்த, ஒரு உண்மை சம்பவம், இன்றளவும் நினைவூட்டப்படுகிறது. கடந்த 130 ஆண்டுகளுக்கு முன், ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில், கோவையிலிருந்து மேட்டுப்பாளையத்திற்கு ரயில்பாதை அமைக்கும் பணிகள் நடந்தன.

ஆங்கிலேய இன்ஜினியர் ஒருவர், ரயில் பாதையை கோவிலின் அருகே அமைக்க மதிப்பீடு செய்தார். ஊர் மக்கள், முக்கிய பிரமுகர்கள், 'இவ்வழியாக ரயில் பாதை அமைக்க வேண்டாம்' என, இன்ஜினியரிடம் முறையிட்டனர். 'அதெல்லாம் முடியாது, கோவில் வழியாகத்தான் ரயில்பாதை அமைக்கப்படும்' என்று, அவர் உறுதியாக கூறிவிட்டார்.

'இவ்வழியாக ரயில் பாதை அமைத்தால், கோவிலுக்கு பாதிப்பு ஏற்படுமே' என, கிராம மக்கள் வருத்தப்பட்டனர். ரயில்பாதை மதிப்பீடு பணிகளை முடித்துக்கொண்டு, தான் தங்கியிருந்த அறைக்கு இன்ஜினியர் சென்றார்.

இரவு தூங்கும் போது, அவரது கனவில், அரங்கநாதப் பெருமாள், ஒரு வெள்ளைக்குதிரையில் வந்து, கோபத்துடன், ஆங்கிலேய இன்ஜினியரை சாட்டையால், இரு முறை அடித்தாராம். திடீரென கனவு கலைந்து எழுந்த இன்ஜினியர், தனது தவறை உணர்ந்து, அரங்கநாதப் பெருமாளிடம் மன்னிப்பு வேண்டினாராம்.

தனது கனவில், பெருமாள் வெள்ளைக்குதிரையில் வந்து, சாட்டையால் அடித்து விட்டதாக, கோவில் அர்ச்சகரிடம் அந்த ஆங்கிலேயர் கூறியுள்ளார். அதன்பிறகுதான், ரயில்பாதையை வேறு பக்கம் மாற்றி அமைக்க, திருத்திய மதிப்பீடு தயாரித்துள்ளார். தம் சொந்தச் செலவில் மரக்குதிரை செய்து, வெள்ளை பெயின்ட் அடித்து, கோவிலுக்கு அன்பளிப்பாக கொடுத்து, இறைவனை வணங்கினாராம்.

ஆங்கிலேய இன்ஜினியர் கொடுத்த வெள்ளைக்குதிரையில் தான், இன்றைக்கும் அரங்கநாதப் பெருமாள், எழுந்தருளி பரிவேட்டை உற்சவத்திற்கு திருவீதி உலா புறப்படுகிறார். 130 ஆண்டுகளுக்கும் மேலாக, இந்த வெள்ளைக்குதிரை கோவிலில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

நாளை... சொர்க்கவாசல் திறப்பின் சிறப்பு